# வாழ்விக்கும் வைணவம்


ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி

18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011

Phone: 0413-2210187 Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com


உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்க நாம் துடியாய்த் துடிக்கிறோம், போராடுகிறோம். ஆனால் கடமைகள் என்று வரும் போது நமக்குக் கசப்பாய்க் கசக்கிறது. மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் அவரவருடைய நிலை, வயது, பொறுப்பு, பால், இவற்றுக்கேற்ப கடமைகள் விதிக்கப் பட்டிருக்கின்றன. அப்படித் தான் இல்லறத்தில் ஈடுபடும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஸ்மிருதிகள் பல சட்டங்கள் இயற்றியிருக்கின்றன. திருமணம் என்ற உடன் மேளதாளம், முதலிரவு, தேனிலவு, உல்லாச யோகம் என்று இப்படி சினிமாப் பாணியிலேயே சிந்தித்துப் பழகி விட்டோம். ஆனால் ரிஷிகள் நமக்கு விதித்த வாழ்க்கை முறை அதுவல்ல. இல்லறம் என்ற சொல்லை இல்ல+அறம் என்று பிரித்துப் பார்த்தால் அந்த வாழ்வில் நாம் சில தர்ம நெறிகளை கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறதென்ற உள்ளார்த்தம் புரியும். மணவாழ்வில் அடியெடுத்து வைக்கும் மாப்பிள்ளை யிடமிருந்து வைதிக சமுதாயம் நிறைய எதிர்ப்பார்க்கிறது. ''தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு, ஐம்புலத்தா றோம்பல் தலை' என்று அழகாகச் சொல்லுகிறார் வள்ளுவர்.

ஒவ்வொரு நாளும், இல்லறத்தான், இறந்துபோன தன் முன்னோர்களை நினைக்க வேண்டும். அவர்களுக்கு முறைப்படி சிராத்தம், தர்ப்பணம் ஆகியவற்றைச் செய்யும் சூழ்நிலையில் இல்லாவிட்டாலும் அவர்களுடைய ஆத்ம நற்கதிக்காகப் பிரார்த்திக்க வேண்டும், அல்லது தானங்கள் செய்ய வேண்டும். இந்தச் சமுதாயத்தையும் நம் உடலையும் வாழ்வையும் நமக்கு உருவாக்கித் தந்த முன்னோர்களுக்கு இல்லறத்தான் நன்றிக் கடன் பட்டிருக்கிறான்!

அடுத்து இறை வழிபாடு. இறைதொழுதல் என்பது ஒவ்வொரு ஆத்மாவுக்கும் நித்தியக்கடமை. இறைநெறியில் சான்றோராய் இருப்பவருக்கு இல்லறத்தான் தன்னால் ஆன சேவைகளைச் செய்ய வேண்டும். இல்வாழ்வு என்பது ஒருவகையான இறைவழிபாடுதான். அதை நாம் உணர வேண்டும். நாத்திகம் பேசிக் குடும்ப வாழ்வு நடத்துகிறவன் இல்லறத்தான் ஆகமாட்டான். நாத்திகரைக் கண்ணால் காண்பதும், அவரோடு உரையாடுவதும் உறவாடுவதும் பெரும்பிழை என்று புராணங்கள் கூறுகின்றன. ஒரு மன்னன் ஒரு யாகம் செய்து முடித்துவிட்டு அவப்ருத ஸ்நானத்தின் போது தன் பால்ய சிநேகிதனான ஒரு நாத்திகனோடு பேசினான் என்பதற்காக அவன் தன் யாக பலனை இழந்து ஒரு நாயாக ஜன்மமெடுத்தான் என்ற புராணக் கதை அனைவரும் அறிந்ததே.

நாத்திகருடன் தொடர்பு இல்லறத்தானின் புண்ணியம் அனைத்தையும் பாழாக்கும். எந்த வகையிலாவது அவனுடன் தொடர்பு கொள்வது குடும்பத்தானுடைய இலக்கணத்துக்கு நேர்மாறானது. கடவுளை வணங்குபவர் காட்டுமிராண்டிகள் என்று எழுதி போஸ்டர் ஒட்டுபவர்களுடன் நமக்கு என்ன பழக்கம் வேண்டிக் கிடக்கிறது? இன்னும் சொல்லப் போனால் நாத்திக னுடைய மனைவிகூட அவனுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியம் இல்லை. கணவனை விட்டு, மனைவி பிரிந்து விடலாம் என்பதற்கு ஸ்ம்ருதிகளில் சொல்லப்படும் காரணங்களில் நாத்திகமும் ஒன்று. ஆன்மிகக் கடமைகளை நிறைவேற்றி வைதிக நம்பிக்கை வலுப்படும்படி வாழ்ந்து ஒரு

உத்தம ஆத்திக சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக ஏற்பட்ட அமைப்பு தான் குடும்ப வாழ்வு என்பது. அதைச் சிதைக்கும் கோட்பாடுகளுக்கு இல்வாழ்வில் மதிப்புத் தரவேண்டிய அவசியம் இல்லை.

கோவில் வழிபாடு, ஆன்மிக ப்ரசாரம், தார்மிகச் சடங்குகள், வேத நெறியை நிலைப்படுத்துதல், ஆகியவற்றுக்கு உற்ற துணையாய் இருக்க வேண்டியவன் கிருஹஸ்தன். இன்று எத்தனை மாப்பிள்ளைகள் அப்படி வாழ்கிறார்கள்? பொருளீட்டுவது, மனைவியுடன் சுகயோகம் அனுபவிப்பது, தன் வாரிசுகளைப் பணக்காரர்களாக்குவது என்ற மூன்று கொள்கைகளைத் தவிர இன்றைய இல்லறத்தாருக்கு வேறு லட்சியம் இல்லை. பழம் பழுத்த மரம் பறவைகளுக்கு நிலைக்களனாய் இருப்பது போல, இல்லறத்தான் ஆன்மீகத்துக்கும், தன் உறவினருக்கும் பரோபகாரியாக உலகினர் தாகம் தீர்க்க ஓடும் நதிபோல, பயிர் விளையப் பெய்யும் மழை போல, அன்னதானம் செய்யும் நிலம் போல, நிழல்தரும் ஆலமரம் போல வாழ வேண்டும். அதுதான் மணவாழ்வின் நிறைவு! மனைவியைப் பற்றிப் பேசும் போது, திருவள்ளுவர் அந்த அதிகாரத்துக்கு வாழ்க்கைத் துணைநலம் என்று பெயரிட்டார். கணவனுக்குத் துணைபுரிவது மனைவியின் கடமை. எடுத்தற்கெல்லாம் சரிசமமாகப் போட்டி போட்டுக் கொண்டு எதிர்க்கட்சி வேலை செய்யும் கொள்கையை மனைவிக்கு இந்துமதம் போதிக்கவில்லை. கணவனுக்கு மனைவி ஏன் அடங்க வேண்டும்? என்று புரட்சிச் சமுதாயம் ஆர்ப்பரிக்கிறது. பொறுமையாகப் பார்த்தால் அதில் நம் முன்னோர்கள் அமைத்துத் தந்திருக்கிற நன்மை என்ன என்று புரியும்.

தாய்மைப் பேறு என்பது ஒரு பெண்ணின் வாழ்வில் முக்கியமான அம்சம். "பிள்ளைப் பெறாமலே இருந்து விட்டால் நல்லது தானே! தளுக்கி குளுக்கி ஜாலியாக வாழலாமே," என்று நினைக்கும் பெண்களைப் பற்றி இங்கே பேச்சில்லை. அந்தக் காலப் பெண்டிர் பொறுப்புணர்வு உள்ளவர்கள். தாய்மையை விரும்புகிறவர் கள். பிள்ளைகளைப் பெற்றெடுப்பதென்பது ஆண்மகனுக்குப் பல கடமைகளில் ஒன்றாகத் திகழும், சாதாரண விஷயம் தான். குழந்தைகளை நேசிக்கிற தகப்பன்மார்களும் இருக்கிறார்கள், பொறுப்பின்றி விரட்டிவிடும் தந்தைகளும் இருக்கிறார்கள். ஆனால் ஒரு தாய் தன் குழந்தையின் வாழ்வையே தன் இதயத் துடிப்பாக எண்ணி வாழ்பவள். அந்தக் குழந்தையின் வாழ்வு வளமாக அமைய வேண்டும் என்பதிலும் அது தன் மீது மெய்யான பாசம் பக்தி உள்ளதாக இருக்க வேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறையாக இருப்பாள். அவள் சிந்தனையை 80 சதவிகிதத்திற்கு மேல் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் விஷயம் இதுவாகத் தான் இருக்கும். இந்த விஷயத்தில் அவளை மகிழ்வோடு வைத்திருக்க நம் பெரியோர்கள் கண்டுபிடித்த யுக்திதான் பதிபக்தி என்பது.

பெண் வயிற்றில் ஒரு குழந்தை உற்பத்தியாவது என்பது அவளுடைய கணவனைப் பொறுத்த வரையில் கணநேர விஷயம். ஆனால் அந்தப் பெண்ணுக்கோ சிசு வளர்ப்பு என்பது மாதக்கணக்கில் தொடங்கி, வருடக் கணக்கில் வளர்ந்து வாழ்க்கை முழுதும் வியாபிக்கிறது. இந்தத் தாய்மைப் பேற்றை அவளுக்குத் தந்த கணவனைக் கடவுளின் பிரதிநிதியாக எண்ணி அவனை மதிக்கும் போது அந்தக் குழந்தையின் வாழ்வு வளமாவதுடன், அந்தக் குழந்தை தன் தாய் மீது மெய்யான பக்தியை வளர்த்தும் கொள்கிறது. கல்வியைத் தந்த குருவை மதித்தால் கல்வி வளரும். உயிரையும் உடலையும் தந்த பெற்றோரை தாய்மை ஈந்த கணவனை மதித்தால் தன் மகன் அல்லது மகளின் எதிர்காலம் சுபீட்சமாவதோடு அவர்கள் மெய்யான பக்தியை தாய்மீது செலுத்த அது காரணமாகிறது.

தகுந்த காரணமின்றித் தன் கணவனைத் துச்சமாக எண்ணி ஒதுக்கும் பெண்களின்

பிள்ளைகள் விஷயத்தில் மேற்கூறிய இரண்டு நலன்களில் ஏதாவது ஒன்றோ அல்லது இரண்டுமோ ஊனமுற்று இருப்பதை இன்றும் எங்கும் காணலாம். மகப்பேறு என்ற பாக்யம் பெறாத மனைவிகளும் தனக்கு சமூக அந்தஸ்து, பாதுகாப்பு, மற்றும் குடும்பவாழ்வு தரும் கணவன்மாரிடம் பணிவு காட்டினால் யாகம், தியானம், யோகம், பூசை, முதலியவற்றால் அடையப்படும் சகல புண்ணியங்களையும் இதிலேயே அடையலாம் என்று பெண்ணுக்கு ஆன்மிக வாழ்வை எளிமைப்படுத்தினார்கள். இன்று ஆண்களோ என்றால் தம் கடமைகளை மறந்து சுயநலப் பிண்டங்களாக வாழ்கிறார்கள். பெண்களோ என்றால், விடுதலை, புதுமை என்று கூவிக் கொண்டு கும்மாளம் போடுகிறார்கள். எட்டி நின்று இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் என்னைப் போன்றோர் கைக்கட்டி, தலை கவிழ்ந்து, கண்ணீர் சிந்துவதைத் தவிர செய்யத் தக்கது வேறொன்றும் இல்லை.

## ஸ்ரீ உ.வே. டாக்டர் கே.ஏ. மணவாள ஐயங்கார் ஸ்வாமியின் மறைவு

ஸ்ரீ உ.வே. டாக்டர் கே.ஏ. மணவாள ஐயங்கார் ஸ்வாமி 11–10–08 அன்று ஆசார்யன் திருவடி அடைந்தது வைணவவுலகிற்குப் பேரிழப்பாகும். பாரத தேசத்தின் பல்வேறு நகரங்களிலும் இவர் ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயக் கருத்துகளை தமக்கே உரிய அழகிய முறையில் உபந்யாஸங்கள் செய்துள்ளார். ஸ்ரீபெரும்பூதூரில் எம்பெருமானார் ஸன்னிதியில் பரிசாரக கைங்கர்யம் புரிந்து வந்த குடும்பத்தில் பிறந்த இவர் தம்முடைய கடின உழைப்பால் படிப்படியாக முன்னேறிப் பெரும்புகழடைந்தார். திருவல்லிக்கேணியில் இந்து உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும், பின்னாளில் சென்னை வைணவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் பணியாற்றினார். தம்முடைய அயராத உழைப்பால் ஐம்பது வயதிற்கு மேல் வால்மீகியையும் கம்பரையும் ஒப்பிட்டு ஆராய்ச்சி நூல் எழுதி, சென்னைப் பல்கலைக் கழகத்தின் டாக்டர் பட்டமும் பெற்றார். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய உபந்யாஸங்கள் தவிர, கவியரங்கங்கள், கருத்தரங்கங்கள், பட்டி மன்றங்கள் ஆகியவற்றிலும் பங்கு கொண்டு மனம் கவரும் வகையில் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். வானொலி, தொலைக்காட்சிகளிலும் பல்வேறு நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார். நூற்றாண்டுக்குமேல் கண்ட திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி ஸபையின் செயலாளராகவும், தலைவராகவும் பல ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். கீதாசார்யன் தொடங்கப் பெற்றபோது, அதில் தொடர்கட்டுரைகள் பல எழுதியுள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் வைணவத்துறையில் நடைபெற்ற கருத்தரங்குகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் முதலியவற்றில் பங்கு கொண்டதோடு மட்டுமல்லாமல், எம்.ஏ., பிஎச்.டி. பட்டங்களுக்குத் தேர்வாளராகவும் இருந்து உதவிகள் பல புரிந்துள்ளார். ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் பேரன்பிற்கு இலக்கான இவர், தம்முடைய உபந்யாஸங்கள் அனைத்திலும் அதனையே தம்முடைய மிகப்பெரிய பேறாகக் குறிப்பிடத் தவறியதில்லை. தமது முதிர்ந்த வயதிலும் பல்வேறு இடங்களுக்குச் சென்று அயராது உபந்யாஸங்கள் நிகழ்த்தியுள்ளார். பரமபதிப்பதற்குச் சிலநாள்கள் முன்னர்கூட, மிகப்பெரிய ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதிக் கொண்டிருப்பதாகவும் அதை சென்னைப் பல்கலைக் கழகத்தில் டி.லிட். பட்டத்திற்காக ஸமர்ப்பிக்க இருப்பதாகவும் கூறியிருந்தார். எண்பத்து மூன்று வயதிலும் அவருக்கிருந்த இந்த ஆர்வம் வியப்பை உண்டாக்கியது. இப்படிப்பட்ட ஒருவரை இழந்தது வைணவ உலகிற்குப் பேரிழப்பே ஆகும். அவருடைய மறைவால் வருந்தும் அவருடைய குடும்பத்தினருக்கும், அபிமானிகளுக்கும் நம்முடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.